**தலைப்பு 217 - நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 217 – நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 செப்தம்பர் 13 ஆந் திகதி நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 323.20 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 307.30 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 16.17 மில்லியன் அதாவது 5 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 290.08 | 278.21 | 11.87 | 4.10 |
| மூலதனம் | 33.12 | 28.82 | 4.30 | 12.95 |
| மொத்தம் | 323.20 | 307.03 | 16.17 | 5.00 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 21701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியான வை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 12.50 | 11.87 | 7.20 | 9.36 | 52.50 | 41.36 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்பு

நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை. | நாளதுவரையாகப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | கணனிகள், மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தால் மாகாண நன்னடத்தை திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து மேற்கொண்ட நிர்மாணங்கள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குரிய பட்டியல்கள், பொருட் பதிவேட்டிற்குட்படுத்தல், பகிர்ந்தளித்தல் போன்ற தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 20,653,900 இற்குரிய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2016 யூன் 30 ஆம் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுக்கு உரித்தான கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 11,459,315 மில்லியனாக இருந்தது.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 3.4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெபப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பௌதீக திட்டமொன்று காண்பிக்கப்படாமல் இருந்ததுடன், நிதி மற்றும் பௌதீக செயல் முன்னேற்றத்தை ஒப்பிடக்கூடிய வகையில் செயல் முன்னேற்ற அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் விபரமான கொள்வனவு கால அட்டவணை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.3 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

### 3.5 இணக்கமின்மை

**வரி தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி செலுத்தும் நிறுவனங்களுக்கு மாத்திரம் வழங்கள் மற்றும் சேவைகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது பெறுமதி சேர் வரி சேர்த்து கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது. எனினும், பெறுமதி சேர் வரி கொடுப்பனவிற்காக பதிவு எண் தெரியாத இரண்டு நிறுவனங்களுக்கு ரூபா 126,848 கூட்டுத்தொகை பெறுமதி சேர் வரியாகக்கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.6 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு, செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) பிரதான நோக்கங்களுக்குரிய செயற்பாடுகளிலிருந்து விலகி செயற்படுதல்**

இலங்கை சமூக பின்னனியில் அநாதைகள், கைவிடப்பட்ட அநாதரவான பிள்ளைகளும் சட்டப் பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கும் ஏனைய பிள்ளைகளின் உரிமைகள், முழுமையான அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு என்பன பாதுகாக்கப்படும் வகையில் சர்வதேச நியமங்களுக்கு இணங்க கொள்கைகளை உருவாக்குதல், செயற்படுத்தல், பின்தொடர் நடவடிக்கை எடுத்தல், மதிப்பீடு செய்தல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பாக தேசிய முறைமையொன்றாக செயற்படுதல் திணைக்களத்தின் செயற்பணியாக இருந்த போதிலும், 1956 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட திணைக்களம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஏறக்குறைய 60 வருடங்கள்

ஆகியிருந்த போதிலும், சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் உலக நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்க தேசிய கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் சட்டங்களை இயற்றுதல் என்பன 2016 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## (ஆ) போதியளவு நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 400 சிறுவர் இல்லங்களை கண்காணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2.00 மில்லியனில் ரூபா 1.76 மில்லியன் 215 சிறுவர் இல்லங்களை கண்காணிப்பதற்காக மாகாண நன்னடத்தை ஆணையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. அதில் ரூபா 1.09 மில்லியன் அனுப்பிவைக்கப்பட்ட 6 அலுவலகங்களிலிருந்து கண்காணிப்பு அறிக்கைகளை பெற்றுக்கொண்டு தொடர் நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வெவ்வேறு செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மாகாண நன்னடத்தை திணைக்களத்திற்கு அனுப்பிய பணத்திலிருந்து உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் எஞ்சிய 1.03 மில்லியனும் திணைக்களத்திற்கு மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ii) பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் 389 சிறுவர் உரிமைகள் மேம்படுத்துதல் / உதவி உத்தியோகத்தர்கள் திணைக்களத்தில் சேவை புரிகின்றனர். அவர்களுக்காக மீளாய்வாண்டின் போது சம்பளம், படிகள், பயிற்சி பாடநெறிகள் மற்றும் ஏனைய நலன்கள் என்பவற்றுக்காக ரூபா 200.42 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாக மாவட்ட உத்தியோகத்தர்களால் மாதாந்தச் செயல் முன்னேற்ற அறிக்கைகள் முறைப்படி அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கைகளிலும் சிறுவர்கள் தொடர்பான போதியளவு தரவுகள் சமர்ப்பிக்கப்படாமையால் பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வை என்பன முறையாக இடம் பெறவில்லையென அவதானிக்கப்பட்டது.

(iii) மீளாய்வாண்டின் போது சிறுவர் / பெற்றோர் / வேறுவகையில் அறிவூட்டுதல் தொடர்பான 4,380 நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 11,084 முறைப்பாடுகள் அறிக்கையிடப்பட்டிருந்தன. அது முன்னைய ஆண்டினை விட 5,735 ஆல் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பதற்கான காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு குறைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக திணைக்களம் கவனம் மேற்கொள்ளவில்லை.

(iv) மீளாய்வாண்டில் அபாய நிலையில் உள்ள 3,047 சிறுவர்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன், 2,788 சிறுவர்களுக்காக மாத்திரம் பாதுகாப்பு திட்டங்களை தயாரித்தல் அல்லது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய சிறுவர்களுக்கான பாதுகாப்பு திட்டங்களை தயாரித்தல் அல்லது பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) மீளாய்வாண்டின் போது அறிக்கையிடப்பட்ட 11,084 சிறுவர் துஷ்பிரயோகங்களில் 5,068 சிறுவர்களுக்காக மாத்திரம் முழுமையான தீர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. 2097 முறைப்பாடுகள் வேறு நிறுவனங்களுக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் 3,919 முறைப்பாடுகளுக்குக் குறுகிய கால தீர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. 94 முறைப்பாடுகளுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

#### அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையிலிருந்து விலகுதல்

இலங்கை மன்றத்தில் நடாத்தப்பட்ட 06 மாத கால நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமா பாடநெறியைப் பின்பற்றுவதற்காக 60 சிறுவர் உரிமை மேம்படுத்தல் உத்தியோகத்தர்கள் மற்றும் உதவி உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. பாடநெறியை பூர்த்தி அடைவதற்கு முன்னர் 2016 சனவரி 11 ஆந் திகதி பாட நெறிக் கட்டணமாக ரூபா 1,890,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 17 உத்தியோகத்தர்களால் பாடநெறி தேவைப்பாடான இறுதி பரீட்சை பரிசோதனை அல்லது சமர்ப்பண பரிசோதனையோ அல்லது மட்டுப்படுத்தப்பட்ட களப் பயிற்சியோ பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் திணைக்களங்கத்தினாலும் அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக செய்யப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கீழே காட்டப்பட்டுள்ள முகாமைத்துவ நலிவுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) சிறுவர் இல்லங்களைப் புனரமைத்தல் மற்றும் நிர்மாணங்களிற்காக மாகாண நன்னடத்தை ஆணையாளர்களுக்கு ரூபா 9,866,395 அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந் நிர்மாணங்களின் செயன் முன்னேற்றம், செயலாற்றல், பின்தொடர் நடவடிக்கைகள் என்பன திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், செலவிடப்பட்ட பணத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டதா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தும் நடைமுறையொன்றும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1505 சிறுவர்களை அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு ரூபா 1,574,162 அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதற்கான உரிய திட்டங்கள், வருகை குறிப்புக்கள், நிகழ்ச்சி நிரல், மற்றும் விரிவுரையாளர்கள் பற்றிய விபரங்கள் பெற்றுக் கொள்ளப்படாதிருந்தமையால் பின்தொடர் செயற்பாடொன்று ஊடாக நிகழ்ச்சித்திட்டங்களின் வெற்றி தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) நன்னடத்தை உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்காக 8 மாகாண சபைகளுக்கு ரூபா 1,689,650 அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதற்கான விபரங்கள் அதாவது மதிப்பீடுகள் வருகை குறிப்புக்கள், அறிக்கைகள், வழங்கப்படாதிருந்ததுடன் பயிற்சியினூடாக எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டமை தொடர்பான செயன் முன்னேற்றத்தை அறவிடுவதற்கு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 சர்ச்சைக்குரிய பிரச்சினை

மீளாய்வாண்டின் போது அனுபவங்களை பரிமாற்றிக் கொள்ளும் 18 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 669,906 செலவிடப்பட்டிருந்தது. உத்தியோகத்தர்களின் அனுபவங்களை பரிமாற்றிக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டமொன்றாக எனக் குறிப்பிடப்பட்டும் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாத பயிற்சி மாநாடொன்றை நடாத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட சிறுவர் உரிமை உத்தியோகத்தர்கள் / உதவி உத்தியோகத்தர்கள் நலன்புரி சங்கத்தின் வருடாந்த கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 806,227 தொகை நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

### 3.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 6 | 3 | 3 |
| (ii) | மூன்றாம் நிலை | 240 | 234 | 6 |
| (iii) | இரண்டாம் நிலை | 224 | 180 | 44 |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 14 | 3 |
| | மொத்தம் | 487 | 431 | 56 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 56 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் சிரேஷ்ட நிலையில் வெற்றிடங்கள் 03 காணப்பட்டமையால் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கை முறையாக இடம் பெறாமையும் இரண்டாம் தர நிலையில் 44 வெற்றிடங்கள் காணப்பட்டமையால் திட்டங்களைச் செயற்படுத்தும் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.